# VIRUDHUNAGAR MUNICIPALITY FORM 3
## Minutes of the Meeting held on 31.05.2019

<table>
<tr><th>Date of Council meeti ng</th><th>Deceis on Numb er</th><th>Subject of the Agenda</th><th>Resolution</th></tr>
<tr><td>31.05.2019</td><td>319</td><td>
பொருள் – 1<br><br>
விருதுநகர் நகராட்சி ஆனைக்குட்டம் குடிநீரேற்று நிலையத்தில் உள்ள கிணற்றுகளில் நீர்மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் வரும் கோடை காலத்தினை சமாளிக்க கீழ்க்கண்ட பணிகளை செய்வது மிகவும் அவசியமாகும். ஆனைக்குட்டம் குடிநீர் திட்டம் மூலமாக 11.00 இலட்சம் லிட்டரும், ஒண்டிப்புலி கல்குவாரி மூலமாக 13.20 இலட்சம் லிட்டரும், உள்ளூர் திட்டம் வாயிலாக 7.20 இலட்சம் லிட்டரும், மற்றும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலமாக இதுநாள் வரை 25.00 இலட்சம் லிட்டர் பெறப்பட்டு வந்ததில் தற்போது தாமிரபரணி ஆற்று படுகையில் குடிநீர் ஆதாரம் குறைவின் காரணமாக 15.00 இலட்சம் லிட்டர் குடிநீர் மட்டுமே பெறப்பட்டு வருவதால் குடிநீர் விநியோகம் காலதாமதம் ஆகி வருகிறது. எனவே, கோடை காலத்தில் குடிநீர் தேவை மற்றும் பயன்பாடு அதிகரிக்கும் என்பதால் குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிக்க வறட்சி நிவாரண திட்ட நிதி வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை பிரிவு III (1) GO, MS NO.125 நாள்.28.05.2019ல் அனுமதிக்கப்பட்டதன் பிரகாரம் நகர் பகுதியில் கீழ்க்கண்ட பணிகளை ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த அனுமதிக்கலாம்.<br><br>
<table>
<tr><th>வ.எண்.</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில்</th></tr>
<tr><td>1</td><td>நகர் பகுதியில் ஏற்கனவே உள்ள ஆழ் துளை கிணறுகள் 20 எண்ணம் ஆழப்படுத்தும் பணிகள் செய்திட</td><td>1.60</td></tr>
<tr><td>2</td><td>சின்டெக்ஸ் புதியதாக 15 எண்ணம் கொள்முதல் செய்யும் பணி</td><td>1.70</td></tr>
<tr><td>3</td><td>புதியதாக மின் மோட்டார் கொள்முதல் செய்யும்</td><td>2.70</td></tr>
</table>
</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | பணி பணி<br><br>மேலும் கோடை காலத்தில் குடிநீர் தேவை மற்றும் பயன்பாடு அதிகரிக்கும் என்பதால் குடிநீர் தட்டுப்பாட்டினை சமாளிக்க குடிநீர் திட்ட நிதி மூலமாக காரிசேரி குடிநீர் திட்டத்தில் புதியதாக போர்வெல் 6 1/2'' ஆழ்துளை கிணறு 2 எண்ணம் மதிப்பீட்டுத்தொகை ரூ.10.20 இலட்சத்தில் அமைக்கவும் அனுமதி வேண்டி ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3707 / 2019 / இ2. | |
| | 320 | **பொருள் – 2**<br>இந்நகராட்சி அலுவலகத்தில் எட்டு இடங்களில் கண்காணிப்பு கேமிரா பொருத்த ஐசிஐசிஐ வங்கி,விருதுநகர் கிளை பங்களிப்பு மூலம் பொருத்தி தருவதற்கு உண்டான செலவினத் தொகை ரூ.45,000/–ற்கான வங்கி வரைவோலை அளித்துள்ளது. (வங்கி வரைவோலை எண்.500379.நாள்.30.04.2019,ஐசிஐசிஐ வங்கி,விருதுநகர் கிளை) அதன்படி இவ்வலுவலகத்தில் கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்த ஐசிஐசிஐ வங்கி நிறுவனமே Jana Nanma Secure and Solutions , Yagappa Nagar, Madurai-20 .நிறுவனம் மூலம் பொருத்தி கொடுக்க பரிந்துரை செய்துள்ளதன்படி அந்நிறுவனமே பொருத்தி கொடுக்கவும், மேற்கண்ட சாதனங்களை நகராட்சிக்கு உரிய சொத்தாக மாற்றவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.<br>கோப்பு எண். 3592–1/2019/இ1 | அனுமதிக்கப்பட்டது |
| | 321 | **பொருள் – 3**<br>இந்நகராட்சியின் மின்விசைபம்புகள், மற்றும் அலுவலக கட்டிடங்கள் பராமரிப்பு பணிக்கு தேவையான மின் உதிரிப் பொருட்களான வயர்கள், பியூஸ் கேரியர், சுவிட்ச் மற்றும் மின் உதிரிப்பொருட்களை 2019–20ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று தேவைக்கேற்ப அவ்வப்போது வாங்கி கொள்ளவும்,அதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூபாய்.2,50,000/– (இரண்டு லட்சத்து அம்பது ஆயிரம் மட்டும்) ஆகும். அனுமதி | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3715/2019/இ2. | |
| | 322 | **பொருள் – 4**<br>விருதுநகர் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரமான ஆனைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையம், காரிசேரி, ஒண்டிபுலி (மதுரை ரோடு சம்ப்) மற்றும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் தாமிரபரணி தண்ணீர் ( VNPR பார்க்) பெறப்பட்டு நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட நீர்நிலையங்களிலிருந்து குடிநீர் பெறப்பட்டு விநியோகிக்கப்படும் குடிநீரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நீர்மாதிரி பரிசோதனை செய்திட வேண்டி இருப்பதால் 2019–20ஆம் ஆண்டிற்கான செலவினம் தொகை ரூபாய்.50400/– (அம்பது ஆயிரத்து நானூறு மட்டும்) ஆகும். மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1904/2019/இ2. | அனுமதிக்கப்பட்டது |
| | 323 | **பொருள் – 5**<br>இந்நகராட்சி பகுதிகளில் உள்ள கழிப்பறைகளை சுத்தம் செய்து தினசரி கிருமி நாசினி தெளிக்கப்பட வேண்டியுள்ளது. மேலும், துப்புரவு பணிகள் செய்யும் போது நீர்த்த சுண்ணாம்புகள், பிளீச்சிங் பவுடர் தெளிக்க 10,000 கிலோ நீர்த்த சுண்ணாம்பு மற்றும் 3000 கிலோ பிளீச்சிங் பவுடர் வாங்க உத்தேச செலவுத்தொகை ரூ.400000/– (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம். தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். /2019/எச்.2 | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 324 | **பொருள் – 6**<br>விருதுநகர் நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு **2019–2020**ம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள், எழுது பொருட்கள், பல வகைப்பட்ட, கணினி இரசீதுகள் கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.**15,00,000/–**க்கு (ரூபாய் பதினைந்து லட்சத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண். **2318** /2019/பி4 | அனுமதிக்கப்பட்டது |
| | 325 | **பொருள் – 7**<br>திரு.எம்.சந்தானமுத்து குழாய்திருப்புநர் நிலை-2 பதவி உயர்வு வழங்க கோரி சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD) No.8965/2019-ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/- மற்றும் இதர செலவினம் ரூ.2500/- ஆக மொத்தம் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) திரு.எம்.முத்துகீதையன், வழக்கறிஞர் மதுரை அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதிக்கு.<br>ந.க.எண்.2721/2019/சி1 | அனுமதிக்கப்பட்டது |
| | 326 | **பொருள் – 8**<br>இந்நகராட்சிக்கு தேவையான பிளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்புத்துாள் வாங்குவதற்கு இந்நகர் மன்ற தீர்மான எண் நாள்.08/03/2019-ல் மன்ற பொருள் வைக்கப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பணிக்கு கீழ்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br>1. ஜீவா எலக்ட்ரிக்கல்ஸ், மோட்டார் ரீவைண்டிங் ஒர்க்ஸ், விருதுநகர் ரூ.4,21,400/-<br>2. கண்ணன் எலக்ரிக்கல்,விருதுநகர் ரூ.4,31,000/-<br>3. RVM ஏஜென்சீஸ், விருதுநகர் ரூ.3,72,250/- | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியான RVM ஏஜென்சீஸ், விருதுநகருக்கு வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். / 2019 / எச்.2 | |
| | 327 | **பொருள் – 9**<br>இந்நகராட்சியின் குடிநீர் விநியோக தலைமைப்பணியிட ஆனைக்குட்டம் பம்பிங்மெயின், ஒண்டிப்புலி பம்பிங் மெயின் மற்றும் கருசேரி பம்பிங்மெயின் நகர் பகுதியின் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு உரிய குடிநீர் பகிர்மான குழாய்களின் பழுதுகளை சரி செய்து குடிநீர் விநியோகப் பணிகள் நல்ல முறையில் செய்திட **2019–2020**ம் ஆண்டிற்கு பம்பிங் மெயின் மற்றும் சப்ளை மெயின் உடைப்பு பணிகள் மேற்கொள்ள அதற்குரிய உபகரணங்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூபாய்.2,20,000/– (இரண்டு இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஆகும். அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். **3811**/2019/இ**2**. | அனுமதிக்கப்பட்டது |
| | 328 | **பொருள் – 10**<br>இந்நகராட்சியின் **36** வார்டு பகுதிகளில் அமைந்துள்ள கைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பராமரிப்பு பணிகள் செய்து இயக்கும் பணிக்கு 2019-**20** ம் ஆண்டிற்கு தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் செய்ய வேண்டி இருப்பதால் அதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூபாய்.2,00,000/– (இரண்டு லட்சம் மட்டும்) ஆகும். மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3812/2019/இ2. | |
| | 329 | **பொருள் – 11**<br>விருதுநகர் நகராட்சி பகுதிகளுக்கு குடிநீர் ஆதாரமான ஆனைக்குட்டம் தலைமைநீரேற்று நிலையம், காரிசேரி, ஒண்டிபுலி (மதுரை ரோடு சம்ப்) மற்றும் தாமிரபரனி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் தாமிரபரனி தண்ணீர் (VNPR பார்க்) தண்ணீர் பெறப்பட்டு 16 எண்ணம் மேல்நிலை மற்றும் கீழ் நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் தண்ணீரை ஏற்றி நகரில் விநியோகம் செய்யப்படும் குடிநீரில் கலந்து விநியோகம் செய்திட அதற்குரிய குளோரின் கேஸ்சிலிண்டர் 10 மாதங்களுக்கு 40 எண்ணம் புதியதாக வாங்கி கொள்ள அதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூபாய்.2,90,000/– (இரண்டு லட்சத்து தொன்னுராயிரம் மட்டும்) ஆகும். மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3813/2019/இ2. | அனுமதிக்கப்பட்டது |
| | 330 | **பொருள் – 12**<br>இந்நகராட்சியின் குடிநீர் விநியோக தலைமைப்பணியிட ஆணைக்குட்டம் பம்பிங்மெயின், ஒண்டிப்புலி பம்பிங் மெயின் மற்றும் கருசேரி பம்பிங்மெயின் நகர் பகுதியின் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு உரிய குடிநீர் பகிர்மான குழாய்களின் பழுதுகளை சரி செய்து குடிநீர் விநியோகப் பணிகள் நல்லமுறையில் செய்திட 2019 - 20ம் ஆண்டிற்கு கடந்த ஆண்டைப்போல தனியாரிடம் ஒப்படைத்து பம்பிங் மெயின் மற்றும் சப்ளைமெயின் உடைப்பு பணிகள் மேற்கொள்ள அதற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூபாய்.7,00,000/– (ஏழு லட்சம் மட்டும்) ஆகும். அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 3814/2019/இ2. | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | 331 | **பொருள் – 13**<br>இந்நகர் கச்சேரி ரோடு (மதுரை ரோடு) கதவு எண்.110, சர்வே வார்டு எண்-2, பிளாக் எண்.-1, சர்வே எண்கள் - 1/2(A), 7/1, 7/2, 7/4, 7/5, 8, 9(P), 10(P), 15/1, 15/2, 15(P)-ல் அமைந்துள்ள K.V.S. பள்ளி வளாகத்தில் அமையும் இடத்தில் K.V.S. 73-வது பொருட்காட்சி -2019 பொருட்காட்சி குழுவினர் 06.12.2018-ம் தேதியன்று விண்ணப்பம் செய்துள்ளார். (29.03.2019 முதல் 21.04.2019 வரை)<br>**அலுவலகக் குறிப்பு**<br>மேற்படி பொருட்காட்சிக்கு தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப் பணித்துறை தமது கடித எண்-ஒ.மு.எண்: 12861/உ/2018, நாள்.20.12.2018-ம் தேதியன்று தடையின்மைச்சான்று வழங்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியின் நகர்மன்றத் தீர்மான எண்.208, நாள்.31.12.2018-ம் தேதியன்று அரசின் அனுமதி வழங்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் பேரில் அரசு செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் (பொருட்காட்சி) துறை கடித எண்-1004/ பொருட்காட்சி/ 2019, நாள்.05.02.2019-ன் படி 29.03.2019 முதல் 21.04.2019 வரை 24 தினங்கள் பொருட்காட்சி நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கொருட்காட்சியில் நிறுவ உள்ள இராட்டினங்களுக்கு பொதுப்பணித்துறையின் (கட்டிடம்) கடித எண்.கோ.7/உ.பொ.வ, நாள்.28.03.2019-ம் தேதியன்று தகுதிச்சான்று வழங்கப்பட்டுள்ளது. மற்றும் மின்வாரிய அலுவலகக் கடித எண்.VNR389/EI/VNR/EXHIBITION/Sec/54/2018, நாள். 28.03.2019-ம் தேதியன்று மேற்கண்ட பொருட்காட்சியில் தற்காலிகமாக அமைக்க உள்ள மின்சாதனங்களுக்கு தடையின்மைச்சான்று உரிய நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டள்ளது.<br>மேற்கண்ட அலுவலகங்களின் பரிந்துரையின் பேரில் 29.03.2019 முதல் 21.04.2019 முடிய பொருட்காட்சி நடத்த மன்றம் அனுமதிக்கலாம்.<br>அவசர அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி பெற்று எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.11130/ 2018 /F2 | அனுமதிக்கப்பட்டது |